மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 02 ம் நாள் திங்கட்கிழமை

*******

திரு.ரெ.செந்தில்குமார், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கணேசன் | **அசல் வழக்கு எண்.** | - | 1/2024 |
| த/பெ. | - | ஆறுமுகம் | **வா..சா.** | - | 2 |
| வயது | - | | | | |
| கிராமம் | - | | | | |
| வட்டம் | - | | | | |
| தொழில் | - | | | | |

02.03..2026

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் வாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் அவர்கள் வீட்டிலிருந்து 4 வீடுகள் தள்ளி நான் உள்ளேன். தாவாச் சொத்துக்கு பக்கத்தில் எனக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். எதற்காக வழக்கு போட்டுள்ளார் வாதிகளின் சர்வே எண்ணை வேறு ஒருத்தர் போட்டு ரிஜிஸ்டர் செய்துவிட்டார். அதற்காக வழக்கு போட்டுள்ளார்.

2. தாவா சர்வே எண் எனக்கு தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 6 செண்ட். 1 , 2 பிரதிவாதிகள் ஆளுக்கு எவ்வளவு எழுதிக்கொண்டார்கள் என்றால் தெரியாது. ராஜா என்பவர் விழுப்புரத்தில் நில அபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்த விவரம் நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது சொன்னார். தாவா சொத்து சித்திலிங்கமடத்தில் உள்ளது.

3. சித்தலிங்கமடம் திருவெண்ணெய்நல்லூர் சார்பதிவாளர் எல்லைக்கு உட்பட்டது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் திருக்கோவிலூர் சார்பதிவாளர் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 2022 க்கு பிறகு

திருக்கோவிலூர் சார்பதிவாளர் பதிவு விவரங்கள் திருவெண்ணெய்நல்லூர் சார்பதிவாளர் அவர்களுக்கு சேர்க்கப்பட்டுள்ளது.

4. இந்த வழக்கில் மாவட்ட ஆட்சியரை தரப்பினராக சேர்க்கவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த பிரதிவாதி தேவையில்லாத தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.